# 6

# கிறிஸ்தவ ஐக்கியம்



# CHRISTIAN FELLOWSHIP

# 6

## எப்படி ஐக்கியப்படக்கூடாது?

HOW NOT TO FELLOWSHIP

**1**

ஐக்கியத்தின் அவசியத்தை அலட்சியப்படுத்தக்கூடாது.

**2**

தன்னல நோக்குகள் தலைதூக்கக்கூடாது.

**3**

அன்பில் மாய்மாலம் இருக்கக்கூடாது.

**4**

ஒப்புரவாகுதலைத் தள்ளிப்போடக்கூடாது.

**5**

பாரபட்சம் காட்டக்கூடாது.

**6**

யாரையும் சீக்கிரம் கழித்துக்கட்டிவிடக்கூடாது.

**7**

பொறாமைக்கு இடம் கொடுக்கக்கூடாது.

**8**

பிறரிடம் அதிகம் எதிர்பார்க்கக்கூடாது.

**9**

நட்பு மனப்பான்மையை இழந்துவிடக்கூடாது.

**10**

ஐக்கியத்தின் வட்டத்தைச் சுருக்கிக்கொள்ளக்கூடாது.

# 6

# எப்படி ஐக்கியப்படக்கூடாது?

## அறிமுகவுரை

- ''எப்படி ஐக்கியப்பட**வேண்டும்**?'' என்றில்லாது,
  ''எப்படி ஐக்கியப்பட**க்கூடாது**'' என்று படிப்பானேன்?

    பைபிளிலுள்ள பிரபல அன்பின் அத்தியாயம்
    அன்பின் 14 வெளிப்பாடுகளை வரிசைப்படுத்துகிறது —
    1 கொரி 13:4-7
    14இல் 8 சொல்வது, அன்பு எதைச் **செய்யாது** என்பதே!

  புதிய ஏற்பாட்டு நிருபங்களிலும்,
  கிறிஸ்தவ ஐக்கியத்தைக் குறித்து எழுதுகையில்,
  நாம் என்ன செய்ய**க்கூடாது** என அப்போஸ்தலர் வலியுறுத்தினர்.

  நமது சபைகளும் சமுதாயங்களும்
  அவ்வளவாய் முறிந்து பிளவுபட்டிருப்பதால்,
  நாம் **களையவேண்டிய** காரியங்களைக் கவனிக்கவேண்டியுள்ளது.
  நமது ஐக்கியங்கள் பலவற்றில் ஐக்கியமே இல்லை!

- இப்பாடத்தில் இரு கிரேக்கச் சொற்களைக் கவனிப்போம் —
  அ) *Ecclesia* = வெளியே அழைக்கப்பட்ட கூட்டம்

    அதாவது, ஒரு ''குடும்பமாய்'' உருவாக
    சமுதாயத்திலிருந்து அழைக்கப்பட்ட ஆடவரும், பெண்டிரும் —
    2 கொரி 6:17,18 ... *வெளிவாருங்கள் ... குமாரர் ... குமாரத்திகள்*

  இவ்விதம் வெளிவந்தோரே ''ஐக்கியம்'' என்றழைக்கப்படுகின்றனர்.
  அதாவது,

  ஆ) *Koinonia*

    முதல் முறை வருவது: அப் 2:42
    அதாவது, *''மாறுபாடுள்ள சந்ததியை விட்டு உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள்''* (வச 40) என்ற செய்திக்குச் செவிமடுத்தோர்.
    *Koinonia* = பொதுவாய்ப் பகிர்தல், அன்னியோன்யம்

■ ஐக்கியம் என்பதற்கு இரு பரிமாணங்களுண்டு —

அ) கடவுளோடு ஐக்கியம்

ஆ) மனிதரோடு ஐக்கியம்

இரண்டும் 1 யோ 1:3இல் இணைக்கப்பட்டுள்ளன —
*... எங்களோடு ஐக்கியம் ... பிதாவோடும் குமாரனோடும் ...*
அதாவது, கடவுளோடுள்ள ஐக்கியமே ஒருவரோடொருவர்
கொள்ளும் ஐக்கியத்திற்கு **அடித்தளம்**.

கடவுளோடுள்ள ஐக்கியம், நிசமானதாயினும், காணக்கூடாதது;
மனிதரோடுள்ள ஐக்கியமோ காணக்கூடியது; எனவே கடினமானது!
அதுதான் சவால்!

இரண்டும் பின்னிப் பிணைந்தவை —

1 யோ 3:14 ... *நித்திய ஜீவன் ... சகோதரரிடத்தில் அன்பு ...*
1 யோ 5:2 ... *தேவப் பிள்ளைகளிடம் அன்பு ... தேவனிடம் அன்பு*

■ தீமோத்தேயுவுக்குக் கிறிஸ்தவப் பணி குறித்து
அப்போஸ்தலன் பவுல் எத்தனையோ அறிவுரைகள் கொடுத்தான்;
அவற்றில் முக்கியமானதொன்று —
*"தேவனது* ***வீட்டில்*** *நடந்துகொள்ளும் வகை"* (1 தீமோ 3:14,15)

■ ஒருவரையொருவர் நேசிப்பது இன்றியமையாதது —

ரோ 13:10ஆ ... *அன்பு ... நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதல்*
1 தீமோ 1:5அ ... *அன்பு ... நியாயப்பிரமாணத்தின் முடிவு*
1 யோ 4:12 ... *தேவனைக் கண்டதில்லை ... ஒருவரிலொருவர் அன்பு*

■ மலைப்பிரசங்கத்தில் வேறு எந்தப் பொருளையும்விட ஆண்டவர்
சகவுறவுகளைப் பற்றியே அதிகம் போதித்திருக்கிறார் (மத் 5-7) —

30 வசனங்கள் ... சகவுறவுகள்
21 வசனங்கள் ... நீதியான வாழ்வு
18 வசனங்கள் ... பணம்
17 வசனங்கள் ... ஜெபம், பக்தி முயற்சிகள்

## எப்படி ஐக்கியப்படக்கூடாது?

### 1. ஐக்கியத்தின் அவசியத்தை அலட்சியப்படுத்தக்கூடாது.

Do not disregard the indispensability of fellowship.

■ கடவுளை நேசி, **அத்துடன்** மனிதனையும் நேசி!

மத் 22:36-40 ... *தேவனிடம் அன்பு ... அயலானிடம் அன்பு*
''சரிசம'' முக்கியத்துவம்

''மனிதனை'' நேசி — (அ) விசுவாசிகள்
(ஆ) அவிசுவாசிகள்

(அ) தேவனுடைய பிள்ளைகள்
(ஆ) இன்னும் தேவனுடைய பிள்ளைகள் ஆகாதோர்

இப்பாடங்களில், நாம் படிக்கவிருப்பது —
தேவனுடைய பிள்ளைகளோடுள்ள உறவு

விவிலியம் இதற்குத் தரும் முக்கியத்துவம் —
கலா 6:10 ... *விசேஷமாக விசுவாச வீட்டார்*
1 பேது 2:17 ... *எல்லாருக்கும் கனம் ... சகோதரர்க்கு அன்பு*

அதாவது, யாரோடும் ''நட்பு'' வைத்துக்கொள்ளலாம்;
ஆனால் ''ஐக்கியம்'' இறைமக்களோடு மட்டுமே.

■ விசுவாசத்தைக் குறித்து எவ்வளவோ பேசுகிறோம்;
ஆனால் **அன்பை** அவ்வளவாய் வலியுறுத்துவதில்லை.

ஆனால் திருமறையில் இவையிரண்டும் சரிசமமாய்
வலியுறுத்தப்பட்டுள்ளன —

கலா 5:6 ... *அன்பினால் விசுவாசம்*
எபே 1:15 ... *விசுவாசமும் அன்பும்*
3:17 ... *விசுவாசமும் அன்பும்*
6:23 ... *விசுவாசத்துடன் அன்பு*
கொலோ 1:3 ... *விசுவாசமும் அன்பும்*
1 தெச 5:8 ... *விசுவாசமும் அன்பும்*
1 தீமோ 1:14 ... *விசுவாசமும் அன்பும்*
பிலேமோன் 4 ... *விசுவாசமும் அன்பும்*

**இரண்டிலும்** வளரவேண்டும்: 2 தெச 1:3

*... விசுவாசம் வளர ... அன்பு பெருக*

அன்பை அசட்டை செய்வதால் நமக்குக் கிடைப்பது —

அ) இருள் (1 யோ 2:9-11) “darkness”
ஆ) மரணம் (1 யோ 3:14ஆ) “death”

இதுவே ‘‘ஆதிமுதல்’’ சொல்லப்படும் செய்தி —

1 யோ 3:11 ... *ஆதிமுதல் ... அன்பு*

- ‘‘ஒருவருக்கொருவர்’’ என்பதை வலியுறுத்தும் புதிய ஏற்பாட்டுப் பகுதிகள் ஏராளம் —
  - ☐ *ஒருவரையொருவர் மன்னியுங்கள்* (கொலோ 3:13)
  - ☐ *ஒருவரையொருவர் கனம்பண்ணுங்கள்* (ரோ 12:10)
  - ☐ *ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்* (ரோ 15:7)
  - ☐ *ஒருவரோடொருவர் ஒருமனதாயிருங்கள்* (ரோ 12:16)
  - ☐ *ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்* (ரோ 15:14; எபி 3:13)
  - ☐ *ஒருவரையொருவர் வாழ்த்துங்கள்* (ரோ 16:16)
  - ☐ *ஒருவருக்கொருவர் பணியாற்றுங்கள்* (1 பேது 4:10)
  - ☐ *ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்திடுங்கள்* (கலா 6:2)
  - ☐ *ஒருவரையொருவர் தாங்குங்கள்* (எபே 4:2)
  - ☐ *ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்* (எபே 5:21)
  - ☐ *ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள்* (1 தெச 5:11)
  - ☐ *ஒருவரையொருவர் பக்திவிருத்தியாக்குங்கள்* (ரோ 14:19)
  - ☐ *ஒருவருக்காயொருவர் ஜெபியுங்கள்* (யாக் 5:16)
  - ☐ *ஒருவருக்காயொருவர் காத்திருங்கள்* (1 கொரி 11:33)

- ஐக்கியம்

  = நெருங்கிய பரஸ்பர உறவு

இந்த நெருங்கிய உறவைக் குறிக்கும் இன்னொரு சொல்: ‘‘கட்டு’’

எபே 4:3 ... *சமாதானக் கட்டு* (bond of peace)
கொலோ 3:14 ... *சற்குணத்தின் கட்டு* (bond of perfection)

பாசத்திலும் சிநேகத்திலும் உலகம் வறண்டுகொண்டிருக்கிறது — ஐக்கியத்தில் வளர விசுவாசிகளுக்கு என்னே சவால்!

■ இறைமக்களோடுள்ள எந்த உறவிலும் ''ஐக்கியத்தின்'' வாசனை வீசவேண்டும் —

(உ-ம்) *உடன் சீடர்* (யோ 11:16) — ஒரே ஆண்டவர்
*உடன் சுதந்தரவாளிகள்* (எபே 3:3) — ஒரே இரட்சகர்
*உடன் போர்ச்சேவகர்* (பிலி 2:25) — ஒரே எதிரி
*உடன் வேலையாள்* (கொலோ 4:11; 1 தெச 3:2) — ஒரே வயல்
*உடன் ஊழியன்* (வெளி 22:9) — ஒரே தேவன்
*உடன் மூப்பர்* (1 பேது 5:1) — ஒரே சபை
*உடன் சிறைவாசி* (ரோ 16:7) — ஒரே பாடு
*உடன் குடிமக்கள்* (எபே 2:19) — ஒரே பரலோகம்

■ இறைமக்களை அறிமுகப்படுத்தும் விளக்கப் படங்கள் ''ஒன்றித்தலையும்'' ''நெருங்கியிருத்தலையும்'' குறிப்பிடுகின்றன—

☐ கட்டிடம் (எபே 2:19-22)
*—கூட்டிக் ''கட்டப்பட்டு''...இசைவாய் ''இணைக்கப்பட்டு''*

☐ குடும்பம் (1 தீமோ 5:1,2)
*— தந்தை ... தாய் ... சகோதரர் ... சகோதரிகள்*

☐ மந்தை (யோ 10:16)
*—வெள்ளாடுகளல்ல...செம்மறி ...ஒன்றாய்ச் செல்லும்!*

இன்னும் நேர்த்தியான விளக்கப் படம் —
☐ *உடல்* (1 கொரி 12:27)
☐ *பின்னலாடை* (கொலோ 2:2,18) நூல்கள் நெசவில் இணைப்பு

■ இன்றைய எழுப்புதல், ஆதிநிலையேகுதலில் — ஐக்கியத்திலல்ல, தொழுகையில்தான் முன்னேற்றம்:

எபே 5:19,20 ... *பேசி ... பாடி ... கீழ்ப்படிந்து ...*
கொலோ 3:16,17 ... *போதித்து ... புத்தி சொல்லி ... பாடி ...*
செப் 3:9 ... *சுத்தமான பாஷை ... ஆராதனை ... ஒரு மனம் ...*

*''அல்லேலூயா''* என்பதே *''கர்த்தரைத் துதியுங்கள்''* என்று நாம் ''பிறர்க்கு'' விடுக்கும் அழைப்புதான் —

சங் 113:1; 115:18; 117; 148:1; 149:1; 150:1,6

- ■ பிரச்னைகளைத் தவிர்க்கவே ஐக்கியம் வேண்டாம் என்கிறோம் —
  ஒரு **பூரணமான** சபையைத் தேடி அலைகிறோம் —
  அடிக்கடி ''ஆதிச்'' சபை என்று பேசுவோம்; ஆனால் அந்தச்
  சபையிலும் பிரச்னைகளும் பிரிவினைகளும் இல்லாமலில்லை.

  - ☐ எபிரெயருக்கு எதிராய் கிரேக்கர்
    அப் 6 ... பெந்தெகொஸ்தே நாளையடுத்துப் பணக்காரியங்களில்
    அவ்வளவு ஒரு மனமாயிருந்தும்கூட ...
  - ☐ புறவின விசுவாசிகளைக் குறித்த பேதுருவின் தவறான
    மனப்பான்மையைப் பவுல் கண்டிக்கிறான் (கலா 2)
  - ☐ பவுலுக்கும் விருத்தசேதனத்தை வலியுறுத்திய சில யூதேயா
    சகோதரருக்குமிடையே வாக்குவாதம் (அப் 15)
  - ☐ யோவான் மாற்குவின் காரியத்தில் பவுலுக்கும் பர்னபாவுக்கும்
    பிரிவினை (அப் 15)
  - ☐ கொரிந்து சபையில் நான்கு கட்சிகள்
    1 கொரி 1 ... *பவுல்/அப்பொல்லோ/கேபா/கிறிஸ்து*
  - ☐ புலால் உண்பதிலும் நாட்களை ஆசரிப்பதிலும் அபிப்பிராய
    பேதங்கள் (ரோ 14)
  - ☐ பிலிப்பு சபையில் இரு சகோதரிகளிடையே சண்டை (பிலி 4)

  நமது குடும்பங்களில் பிரச்னைகள் இல்லையோ?
  உடனே தள்ளிவிடுகிறோமோ அல்லது பிரிந்துபோகிறோமோ?

  ஒருவர் இப்படிச் சொன்னார் —

  ஐக்கியம் = தேவனது பூரணமற்ற ஒரு பிள்ளைக்கு
  தேவனது பூரணமற்ற மற்ற பிள்ளைகளோடுள்ள உறவு

- ■ இறைமக்களின் ஐக்கியத்தை நாம் புறக்கணித்தால்,
  இழப்பும் பாதகமும் நமக்குத்தான் —

  - ☐ எபி 10:25,26 ... *மனப்பூர்வமாய்ப் பாவம் செய்தல்*
  - ☐ பிர 4:9-12 ... ஆன்மீக வாழ்வில் குளிர்ந்துபோதல்
  - ☐ எபே 3:18...தேவனது வழிகளில் அறிவும் வளர்ச்சியும் குன்றுதல்

- தமது மக்கள் ஒருவரோடொருவர் ஐக்கியப்படுவதை அவ்வளவாய் விரும்பும் தேவன் அதற்கென்றே ஒரு ஞாபகப் புத்தகம் வைத்திருக்கிறார் —

  மல் 3:16 ... *கர்த்தருக்குப் பயந்தவர்கள் ... பேசிக்கொள்வார்கள்*

- எவ்வளவு காலந்தான் இந்த ஐக்கியம் நமக்குத் தேவைப்படும்?

  கிறிஸ்து திரும்பும்வரை (1 தெச 3:12,13)
  அவர் திரும்பிய பிறகும் (வெளி 19:7,8)
  *... மணவாட்டி ... பரிசுத்தவான்கள்*

  கிறிஸ்து திரும்பி வருவது தனி நபர்களுக்காக அல்ல, முழுத் திருச்சபைக்காகவே!

- Sabine Baring-Gould (1834-1924) என்பவரது பாடல்:

  *Onward Christian soldiers ...*

  *கிறிஸ்து சபை வல்ல சேனை போன்றதாம்;*
  *பக்தர் சென்ற பாதை செல்கின்றோம் நாம்;*
  *கிறிஸ்து தாசர் யாரும் ஓர் சரீரமே,*
  *விசுவாசம், அன்பு, நம்பிக்கை ஒன்றே!*

  *யுத்தம் செய்வோம் வாரும், கிறிஸ்து வீரரே!*
  *இயேசு சேனை கர்த்தர் பின்னே செல்வோமே!*

## 2. தன்னல நோக்குகள் தலைதூக்கக்கூடாது.
Do not be overruled by self-interests.

- கடைசி நாட்களின் முதல் அடையாளம் —

  2 தீமோ 3:1,2 ... *கொடிய காலங்கள் ... தற்பிரியராயிருப்பர்*

  அடுத்த அடையாளம்: *"பணப்பிரியராய் ..."*

  — சுய விருப்பமும் பண ஆசையும் இரட்டைச் சகோதரிகள்.

  எனவேதான்,

  ஆவியானவரது அருள்மாரியின் முதல் விளைவு —

  அப் 2:44,45 ... *உடைமைகளை விற்று ... பங்கிட்டனர்*

  4:34,35 ... *நிலங்களையும் வீடுகளையும் விற்று பங்கிட்டனர்*

  அப்போஸ்தலன் யோவான் விடும் சவால் இதுவே —

  1 யோ 3:17 ... *ஆஸ்தி ... இருதயத்தை அடைத்தால் ... அன்பு?*

  தேவையிலிருப்போருக்காய் நமது "பணப்பையைத்" திறக்கும்வரை, நமது இதயங்களை இன்னும் அவர்களுக்குத் திறக்கவில்லை —

  மத் 6:21 ... *உங்கள் பொக்கிஷம் ... உங்கள் இருதயம்*

  "அன்பைக்" குறித்த பிரசங்கங்களைச் சலிக்காமல் கேட்போம்;
  "தற்பிரியம்" இருப்பதாலோ அதை அப்பியாசிக்க மாட்டோம்—

  எசேக் 33:31 ... *வாய் ... அன்பு ... இதயங்கள் ... பொருளாசை*

  சுய நலத்தினால் கட்டப்பட்டிருக்கும் மார்க்கத்தைத்
  தீர்க்கன் ஏசாயா கண்டனம் பண்ணினான் —

  ஏசா 58:6,7 ... *உபவாசம் ... மாம்சமானவனுக்கு மறைத்து ...*

  இதுவே நெடுகவே இயேசுவின் போதனையாயிருந்தது —

  யோ 15:13 ... *தனது ஜீவனைக் கொடுப்பதிலும் மேலான அன்பு*

  ஜீவன் = தருணம் + தாலந்து + தனம்
  Life = Time + Talent + Treasure

அப்போஸ்தலன் யோவான் இதை நடைமுறையில் விளக்குகிறான் —

1 யோ 3:16,17 ... *அன்பு ... பொருட்கள் ...*

**யோ 3:16**ஐ அடிக்கடி குறிப்பிடுகிறோம் ... *தேவன் இவ்வளவாய் அன்பு*
**1 யோ 3:16**ஐப் பற்றி என்னவோ? ... *சகோதரருக்காய் ஜீவன்*

கீழ்க்கண்ட வசனத்தைச் சுவர்களில் தொங்கவிடுகிறோம் —

ரோ 12:12இ ... *"ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருங்கள்"*
வச 13ஐப் பற்றி என்னவோ? *"பரிசுத்தர்களின் குறைவில் உதவி"*

■ பொருளாதாரக் காரியங்களில் மட்டுமல்ல,
சுய நலத்திற்கும் சுய விருப்பங்களுக்கும் மேல் ஏறி வரவேண்டிய
மற்ற பகுதிகளும் உண்டு —

□ மக்களுடைய பாரங்கள்

இருவிதமான பாரங்கள் —

அ) உங்களால் சுமக்கக்கூடியவை (கலா 6:5)

அனுதினக் கடமைகள், கடினப் பாதைகள், பிரச்னைகள்.
இவைகளை ஜெபத்தினாலும் ஒழுங்குமுறைகளினாலும்
நாமே சமாளித்துக்கொள்ளப் பழகவேண்டும்.

ஆ) உங்களால் சுமக்கமுடியாதவை (கலா 6:2)

அசாதாரண சூழ்நிலைகள்
திடீர் சேதங்கள்
எதிர்பாராத இழப்புகள், முதலியன.

(உ-ம்) நமது சகோதரனாகிய யோசேப்பின் இக்கட்டு —

ஆமோஸ் 6:1,4,6 ... *ஐயோ ... சீயோன் ... நிர்விசாரம்*

(உ-ம்) இவ்வித இக்கட்டான சூழ்நிலைகளை இயேசு குறிப்பிடுகிறார்:

மத் 25:42-44

— ஆகாரமில்லை, தண்ணீரில்லை
— கைவிடப்பட்ட நிலை
— உடையில்லை, அடிப்படை வசதியில்லை
— வியாதி
— சிறைவாசம்

இடது பக்கம் அனுப்பப்பட்டோர் கொடூரத் தேவையிலிருப்போருக்கு
உதவ முடியாத அளவு எதிலேயோ மூழ்கியிருந்தனர்.

நாம் பொதுவாகச் சொல்வது: ''எனது பிரச்னைகளே தலைக்குமேல்
இருக்கையில் பிறரைப் பற்றி நினைக்க நேரமெங்கே?''

— இவ்வித மனப்பான்மையை ஒழித்துவிடுங்கள்:
''நான் எனது காரியங்களைப் பார்க்கட்டும்!''
பிறரது பாடுகளைக் கண்டுங்காணாமலும் இருக்கக்கூடாது —
ரோ 12:15 ... *''அழுகிறவர்களுடனே அழுங்கள்''*

— இதில் இரகசியம் என்னவென்றால்,
பிறரது துன்பங்களில் நம்மை ஈடுபடுத்திக்கொள்ளும்போது,
நாமும் தேற்றப்படுவோம் ... 2 கொரி 1:6,7

— தன்னலமற்ற பிரசங்கிமார், தலைவர்கள் இல்லையே
எனப் பவுல் அப்போஸ்தலன் புலம்புகிறான் ...
பிலி 2:20,21 ... *தீமோத்தேயு ... மற்றவரெல்லாம் ... சுயநலம்*

☐ நாம் தன்னல விருப்பங்களிலிருந்து வெளிவரவேண்டிய
இன்னொரு பகுதி:
பிறரது கருத்துக்கள், அபிப்பிராயங்களை மதித்தல்
ரோ 15:1-3... *பலமுள்ளவர்... பலவீனர்... நமக்கே பிரியமாய்*

(உ-ம்) உணவுப் பழக்கங்கள்
1 கொரி 10:23,24... *உரிமையுண்டு, ஆனால் பயனளிக்காது*
8:13 ... *ஒருபோதும் புலால் உண்ணேன்!!!*

(உ-ம்) கலந்துரையாடல்கள், விவாதங்கள்
பிலி 2:3,4 ... பிறரது கருத்துக்களை மதித்திடுங்கள்

(உ-ம்) பாமாலையா பல்லவிகளா? ஆர்கனா கிட்டாரா?
சங் 46:10 ... *அமர்ந்திருந்து அறிந்துகொள்ளுங்கள்*
47:1 ... *ஆனந்த சத்தமிடுங்கள்*

(உ-ம்) முன்னுரிமை, பதவியுயர்வு

மத் 20:20,21,24 ... *செபெதேயுவின் குமாரர் ...*

தன்னல நாட்டம் ஒருமனத்தைக் குலைக்கிறது!

- முடிவாக —

இதிலிருந்து ''எனக்கு'' என்ன கிடைக்கும்

என்ற இன்றையப் போக்கைக் களைந்து,

நான் ''பிறர்க்கு'' எப்படி உதவலாம்

என்று சிந்திக்கப் பழகுங்கள்.

நன்மைகள் பெறுவதற்காகவே உறவுகள் வைத்துக்கொள்வது கிறிஸ்துவின் சபையிலிருந்து அகற்றப்படவேண்டிய பழக்கம்.

## 3. அன்பில் மாய்மாலம் இருக்கக்கூடாது.

Do not be hypocritical in love.

- மாய்மாலம் = நடிப்பு, போலித்தனம்

  கிரேக்கச் சொல்: Hypocrite = நடிப்பவன்

  அதாவது, உத்தமத்திலும் நம்பகத்திலும் குறைபாடு

  பல்வேறு பாவங்களுக்காய் ஆண்டவர் மக்களைக் கடிந்துகொண்டார்; ஆனால், ''மாய்மாலம்'' என்ற பாவத்திற்கு மட்டும் ''ஐயோ!'' என்றார்.

  கொலைகாரரே, உங்களுக்கு ஐயோ, என்றோ
  திருடரே, உங்களுக்கு ஐயோ, என்றோ
  விபச்சாரக்காரரே, உங்களுக்கு ஐயோ, என்றோ சொல்லாது,
  *''மாய்மாலக்காரரே, உங்களுக்கு ஐயோ!''* என்றார்.

  (உ-ம்) மத் 23 ... எத்தனை ''ஐயோ''க்கள்!

- மாய்மாலத்தில் படுமோசமானது

  சகவுறவுகளில் காணப்படும் மாய்மாலமே —

  எனவேதான், ரோ 12:9அ...*''உங்கள் அன்பு மாயமற்றதாயிருக்கட்டும்''*

  தீமோத்தேயுவுக்குப் பவுல் இதை விரிவாக்கினான் (1 தீமோ 1:5)

  அ) *''சுத்த இருதயம்''* — தேவனுக்குமுன் உண்மை
  ஆ) *''நல்ல மனசாட்சி''* — மனிதருக்குமுன் உண்மை
  இ) *''மாயமற்ற விசுவாசம்''* — வேதத்திற்குமுன் உண்மை

- உண்மையான, உத்தமமான, களங்கமற்ற அன்பு இல்லாது ஐக்கியம் சாத்தியமல்ல —

  ☐ 1 யோ 1:7 ... *நாம் ஒளியிலே நடந்தால் ... ஐக்கியம்*

  ☐ 2 இரா 10:15,16 ... *யோனதாபிடம் யெகூ ராஜா:*
  *''உன் இருதயம் செம்மையாயிருந்தால் ... கை கொடு''*

  ''உத்தமமான இருதயம்'' இல்லாது கைகுலுக்கல், அணைத்துக் கொள்ளுதல், முத்தங்கள் இவையெல்லாம் அர்த்தமற்றவை.

☐ உத்தமமான ஐக்கியத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டு —

தாவீதும் யோனத்தானும் (1 சாமு 18:3,4)

*''சால்வை ... கவசம் ... பட்டயம்கூட ...''*

என்னே நம்பிக்கை! ஆயுதம் களைதல்!

யோனத்தான்: ''தாவீது என்னை முதுகில் குத்தமாட்டான்!''
தாவீது நல்மனசாட்சியுள்ளவன் என்று யோனத்தானுக்குத் தெரியும்—

(உ-ம்) 1 சாமு 24:4-7
மலம் கழிக்க சவுல் வெளியே சென்றிருந்தபோது
தாவீது அவனது சால்வையின் ஓரத்தை வெட்டிக்கொண்டான்.
ஆனால் தாவீதின் *''இருதயம்''* அடித்துக்கொண்டிருந்தது ...
*... ''கர்த்தர் அபிஷேகம் பண்ணினவன் ...''*

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனால் அபிஷேகிக்கப்பட்டவன்தானே?

## ■ ஐக்கியங்களில் மாய்மாலம் வெளிப்படும் விதங்கள் —

அ) முகத்துதி (இதில் அதிகம் அடிபட்டவன் தாவீது)

சங் 12:1,2 ... *இருமனம்* ...
28:3 ... *சமாதானத்தைப் பேசி இதயத்திலோ பொல்லாப்பு*
55:21 ... *வெண்ணெய்போல் ... உருவின பட்டயங்கள்*
62:4ஆ ... *வாயினால் ஆசீர்வாதம் ... உள்ளத்தால் சபிப்பு*

ஆ) புறங்கூறுதல்/கதைகட்டுதல்/புரளி பேசுதல்

நீதி 16:27,28 ... *கோள் ... சிநேகிதரைப் பிரித்தல்*
17:9 ... *கேட்டதைக் சொல்லுதல்...சிநேகிதரைப் பிரித்தல்*

ஜெபத்திற்காய்த்தான் பகிர்ந்துகொள்வதாக அவன் **நடிப்பான்!**
கொடுத்த ''தகவலுக்கு'' மட்டுமல்ல, மனதில் ''பதித்ததற்கும்''
நாம் பொறுப்பு.

கோள்காரனுக்கு இடங்கொடுப்பதும் கோள் சொல்வதும் ஒன்றுதான்—

— *''அக்கினி''* vs. *''விறகு''* (நீதி 16:27/26:20)
— உற்றுக் கேட்பவனும் *பொய்யன், தீயவன்* (நீதி 17:4)

எனவே, உங்கள் விருப்பமின்மையைக் காட்ட
3 கேள்விகள் கேளுங்கள் —

- ☐ நீங்கள் சொல்வது அந்நபருக்குப் பயனளிக்குமா?
- ☐ நீங்கள் சொல்வது உங்களுக்குப் பயனளிக்குமா?
- ☐ நீங்கள் சொல்வது கடவுளை மகிமைப்படுத்துமா?

கோள்காரனின் வார்த்தைகள்மீது குளிர்நீர் ஊற்றிவிடுங்கள்!

இ) குற்றங்காணல்

— *''உத்திரம்''* vs. *''துரும்பு''* ... மத் 7:5

— பிறர்மீது கடினம், நம்மீது இலகு
ரோ 2:1 ... *எவராயினும் ... எதிலென்றாலும்*

மாய்மாலக்காரர் மற்றவர்களை வசப்படுத்தித் தங்களிடம்
குற்றங்களை அறிக்கையிடச் செய்து பெருமிதம் கொள்வர் —
ஆனால், யாக் 5:16 ... *''ஒருவருக்கொருவர் அறிக்கை''*

ஒருவரைத் திருத்துகிறேன் என்று சொல்லி,
மாய்மாலக்காரர் அவனை அழித்துவிடுவர் —

கலா 6:1 ... *சாந்தத்தோடு ... சீர்பொருந்தப்பண்ணுங்கள்*

இயேசுவோ விபச்சாரத்தில் அகப்பட்டவளைத் ''திருத்தினார்,''
அதே வேளையில் ''மீட்டெடுத்தார்'' (யோ 8:1-11)

*''நான் உன்னைத் தீர்ப்பதில்லை ... இனிப் பாவம் செய்யாதே!''*

மாய்மாலக்காரரின் அடுத்த குணம் —

ஈ) ஆபத்தில் கைவிடுதல்

— உண்மையான ஐக்கியம் உபத்திரவத்திலும் கைகொடுக்கும்
2 கொரி 1:7

சிறந்ததோர் எடுத்துக்காட்டு —
அபியத்தாரிடம் தாவீது சொன்னது: 1 சாமு 22:23
*''என்னிடம் நீ பயமில்லாதிருக்கலாம்!''*

— யோபுவின் நண்பர் சிறந்த ஆலோசகராயில்லாதிருக்கலாம்;
ஆனால் நல்ல தோழராய்க் கூடவே இருந்தனர்.

யோபு 2:11-13 ... 7 நாள் இரவும் பகலும் யோபுவுடன்,
ஒரு வார்த்தைகூட பேசாது, அமர்ந்திருந்தனர்!

இம்மூன்று நண்பரும் மாய்மாலத்திற்கு எதிராய்ப் பேசினர் —

பில்தாத் (யோபு 8:13) *''மாயக்காரர் நம்பிக்கை அழியும்''*
எலிப்பாஸ் (யோபு 15:34) *''மாயக்காரர் வெறுமையாய்ப் போவர்''*
சோப்பார் (யோபு 20:4) *''மாயக்காரர் சந்தோஷம் ஒரு நிமிடமே''*
பிந்தி வந்து சேர்ந்த 4ஆம் நண்பனும்
மாய்மாலத்திற்கு எதிராய்ப் பேசினான் —
எலிகூ (யோபு 34:29) *''மாயக்காரர் ... கண்ணிகள்''*

ஆம், *''ஆபத்தில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்''* (நீதி 17:17)
— துன்ப நேரத்தில் யாக்கோபுக்கு உதவாததால் ஏசாவைக்
கர்த்தர் கடிந்துகொண்டார்

ஒபதியா 10-14 ... *''நீ அப்படி இருந்திருக்கக்கூடாது''*
(மும்முறை)

உ) வார்த்தையில்தான் அன்பு, செயலில் அல்ல
1 யோ 3:18 ... *வார்த்தையினால் அல்ல ...*
அடுத்த வசனமே உள்ளத்தில் உண்மை குறித்துப் பேசுகிறது
(வச 19)

உலகப் பொருட்களைப் பகிர்தலைக் குறித்துப்
பேசியதும் மாய்மாலக்காரர் நழுவி விடுவர்!

எளியோர், தேவையுள்ளோரோடு ''பணத்தைப்'' பகிர்வதில்
தயக்கம் காட்டியவர் மீதுதான் ஆதிச்சபையில்
மாய்மாலத்திற்கெதிரான முதல் நியாயத்தீர்ப்பு —

அனனியா & சப்பீராள் (அப் 5:1-10)

## 4. ஒப்புரவாகுதலைத் தள்ளிப்போடக்கூடாது.
Do not postpone reconciliation.

- சுவிசேஷமே ஒப்புரவாகுதலின் செய்திதான்.

  இது சிலுவைச் சின்னத்தின் மூலம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது—

  † நெடுக்கு: தேவனோடு | எபே 2:13,14,18
  குறுக்கு: மனிதனோடு

  இது கிறிஸ்துமஸ் செய்தியிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது —
  லூக் 2:13,14 ... *தேவனுக்கு மகிமை ... மனிதர்மேல் பிரியம்*

  துர்ப்பாக்கியமாக, நாம் முதல் பரிமாணத்தோடு நிறுத்திவிட்டோம்.

  இவையிரண்டும் நாணயத்தின் இரு பக்கங்கள் —
  தேவனோடு சரியாய் இருத்தல்;
  மனிதரோடு சரியாய் இருத்தல்.

  ஒன்றில்லாது அடுத்தது நிறைவுபெறாது —
  1 யோ 4:20 ... *பொய்யன் ... அவன் எப்படி ...?*

  அப்படியே,
  *"ஒருவனது வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால் ..."* (நீதி 16:7)
  ஒன்று அடுத்ததற்கு வழிநடத்தும்.

- கடவுளுக்கு உகந்து வாழவேண்டுமானால்
  மனிதரோடு ஒப்புரவாகுவது அத்தியாவசியம் —

  மத் 5:23,24 ... *பலிபீடம் ... **முன்பு** ஒப்புரவாகி ...*
  ஒப்புரவாகுதலைத் **தள்ளிப்போடக்கூடாது.**

  இந்த வசனப் பகுதியில்,
  நீங்கள்தான் தவறிழைத்தவர்கள்:
  உங்கள் சகோதரன் தவறிழைக்கப்பட்டவன்.
  இங்கு, **நீங்கள்தான்** முதலடி எடுத்துவைக்கவேண்டும்.

ஒருவேளை நீங்கள்தான் தவறிழைக்கப்பட்டவரென்றால் ...

மத் 18:15 ... இங்கும், **நீங்களே** துவங்கவேண்டும்.

- ஒப்புரவாகுதல் ஏன் அவ்வளவு முக்கியம்?
  - ☐ நமது தேவனின் பெயரே அதுதான் —

    *''**சமாதானத்தின்** தேவன்''* ரோ 16:20
    1 கொரி 14:33
    1 தெச 5:23
    2 தெச 3:16
    எபி 13:20

  - ☐ மாதிரி ஜெபத்தைக் கற்றுக்கொடுத்தவுடன், முதல் பாடம் —
    மத் 6:14,15 ... *நீங்கள் மன்னித்தால்* ...
  - ☐ சிலுவையில் முதல் வார்த்தை —
    *''பிதாவே, இவர்களுக்கு மன்னியும்''* ... (லூக் 23:34)
  - ☐ ஒரு சகோதரனைக் குற்றப்படுத்துவது பெருந்தவறு —
    (உ-ம்) மத் 5:21,22...*''நரகம்''* முதலாவது சொல்லப்பட்ட இடம்.
    — அதுவரை ''பரலோகத்தைப்'' பற்றித்தான்! (வச 12,19,20)
  - ☐ தேவனோடு சரியாக நடக்க, சுத்த **மனச்சாட்சி** அத்தியாவசியம் —
    1 யோ 3:18-21 ... *அன்பு* ... *மனச்சாட்சி* ...

  பைபிள் முழுவதும் பல எடுத்துக்காட்டுகள் —

  1 சாமு 2:26...சிறுவன் சாமுவேல்...*தேவனோடும் மனிதரோடும்*
  லூக் 2:52 ... இளைஞன் இயேசு ... *தேவனும் மனிதரும்*
  அப் 24:16...திருத்தூதுவன் பவுல்...*தேவனோடும் மனிதரோடும்*

- ஒப்புரவாகுதல் முக்கியம் மட்டுமல்ல,
  அது முடிந்த அளவு **உடனடியாய்ச்** செய்யப்படவேண்டியது —

  எபி 12:14,15 ... *வேர் ... கசப்பு ... ''அநேகர்'' தீட்டுப்படுதல்*
  இருவருக்கிடையே உள்ள கசப்பு ''அநேகரைப்'' பாதிக்கிறது.

எனவேதான் கோபத்தை முடிந்த அளவு **சீக்கிரம்** விட்டுவிடும்படி வேதம் நமக்கு அறிவுறுத்துகிறது ...

எபே 4:26,27 ... *கோபம் ... பாவம் ... சூரிய அஸ்தமனம்*
— பிசாசுக்கு இடங்கொடுத்தல்

இது ஒரு பழைய ஏற்பாட்டு மேற்கோள் —

சங் 4:4 ... *கோபம் ... பாவம் ...* படுக்கையில் *அமர்ந்திரு!*

கோபம் நீடித்தால், அது ஆபத்தாக மாறிவிடும்.
A-N-G-E-Rக்கும் D-A-N-G-E-R க்கும் ஒரு எழுத்துதான் வித்தியாசம்!

■ நீண்ட கோபத்திற்கு எதிராக மிகப்பெரும் எடுத்துக்காட்டு தேவனே—
சங் 30:5அ ... *அவரது கோபம் ... ஒரு நிமிடம் மட்டும் ...*

ஆனால் நம்மைப் பொருத்தவரை,
அன்பு ''ஒரு நிமிடம்,''
கசப்போ ''வாழ்நாள் முழுவதும்!''

தேவன் கூறும் காரணம்: ஆதி 6:3 ... *அவன் மாம்சம்தானே*

எனவேதான், பிறரை மன்னிக்கத் திரும்பத் திரும்ப அழைப்பு —
*''கிறிஸ்து/தேவன் நம்மை மன்னித்தது போல!''*
எபே 4:32 ... *கிறிஸ்துவுக்குள் தேவன் ...*
கோபம் (வச 26) ▸▸ கசப்பு (வச 31) ▸▸ மன்னிப்பு (வச 32)

கொலோ 3:13 ... கிறிஸ்து மன்னித்தது போல ...
— *''குற்றச்சாட்டு''* நியாயமாயிருந்தாலும்

இயேசுவின் ஒரு கடுமையான உவமானம் — மத் 18:23-34
எஜமான் முதலாம் ஊழியனுக்கு (10,000 தாலந்துகள்)
முதலாம் ஊழியன் இரண்டாம் ஊழியனுக்கு (100 வெள்ளி)
10,000 தாலந்துகள் = 20 ஆண்டு கூலி
100 வெள்ளிப்பணம் = 20 வாரக் கூலி

மனிதரிடையே மன்னியாமை தேவனுக்குமுன் நன்றியின்மையாம்!

மனிதரை மன்னிப்பதில் தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது
அவர் நமக்குச் செய்தவையோடு ஒப்பிடும்போது **ஒன்றுமேயில்லை!**

இதுதான் மன்னிப்பதற்கு நம்மை ஊக்குவிக்கும் விசை, காரணி.

- இரு காரியங்கள் மன்னித்தலை எளிதாக்குகின்றன —
  நினைக்க: (அ) கடவுள் நம்மை எவ்வளவு மன்னித்தார்!
  (ஆ) கடவுள் பிறரை எவ்வளவு மன்னித்திருக்கிறார்!

  (உ-ம்) கெட்ட குமாரன் — அவன் அழித்தது ''தந்தையின்'' ஆஸ்தி,
  ''சகோதரனின்'' ஆஸ்தி அல்ல!

  **தகப்பனே** அவனை மன்னித்துவிட்டான்;
  அவன் **சகோதரன்** ஏன் மன்னிக்கக்கூடாது?

- ஒப்புரவாகுதல் எளிதாய் இல்லையேல் —
  நீங்கள் செய்யவேண்டியது ...
  (அ) தேவ அன்பை உங்கள் இதயத்தில் ஊற்ற வேண்டுங்கள்.
  (ஆ) இவ்வித ஜெபத்தோடு நிறுத்தாது,
  ஒப்புரவாக **அடியெடுத்து** வையுங்கள்.

  (உ-ம்) லூக் 17:4-6 ... *7 முறை மன்னிப்பு ... விசுவாசம் வர்த்திப்பு ... கடுகு விதை ... காட்டத்தி மரம் ...*

  (உ-ம்) யாக்கோபு
  அவன் ஏசாவுக்குப் பயந்திருந்தான்;
  ஆனாலும் ஒப்புரவாக அடியெடுத்து வைத்தான் (ஆதி 32)
  ஆதி 32இன் இறுதியில், பெனியேலின் அனுபவம்!
  ஆதி 33 ... ஏசாவைச் சந்தித்தான்; இருவரும் ஒப்புரவானார்கள்!

  ஒப்புரவாக எடுக்கப்படும் முயற்சிகளைத் தேவன் கனம்பண்ணுகிறார்.

  உங்களால் **இயன்ற எல்லாவற்றையும்** செய்தபின் (ரோ 12:18),
  காரியங்களைக் கடவுள் கரத்தில் விட்டுவிடுங்கள் —
  அதாவது, அந்த நபருக்காக ஜெபித்துக்கொண்டே இருங்கள்.

(பார்க்க: பக்கங்கள் 38-39, 98-100, 255-258, 751-754)

## 5. பாரபட்சம் காட்டக்கூடாது.
Do not be partial.

- ''பாரபட்சத்திற்கு'' மற்றொரு வார்த்தை — ''ஒருபுடைச் சார்பு''
அதாவது, நியாயமான காரணமின்றி ஒருவரை உயர்த்தி
அடுத்தவரைத் தள்ளுவது (prejudice)

— பாரபட்சம் ஒரு பெரிய பாவம்.

யாக் 2:8,9 ... *பட்சபாதம் ... பாவம் ...*

*''விபச்சாரம்''* அல்லது *''கொலைக்குச்''* சமம் (வச 10,11)

☐ நாமெல்லாரும் தேவனுக்குமுன் சமநிலையில் உள்ளோம்:
நாம் சகோதர சகோதரிகள், தொலை உறவினரல்ல!

கலா 3:26 ... எல்லாரும் *புத்திரர் ...*

ரோ 8:29 ... இயேசு நமது மூத்த சகோதரர் ... நாம் சகோதரர் ...

எபி 2:11 ... *சகோதரர் என்று சொல்ல வெட்கப்படவில்லை!*

- **பாரபட்சம் காணப்படும் பகுதிகள்**

(அ) ஏழை-பணக்காரர்

யாக் 2:1-4 ... *ஆலயத்தில் செல்வந்தன் ... தரித்திரன் ...*

நம் சகோதரர் பெற்றுள்ள இரட்சிப்பின் ஈவு
நமது எல்லா செல்வத்தையும்விட மதிப்புள்ளது — சங் 49:6-8

திருப்பந்தியிலும் தரித்திரரை ஒதுக்குவது —

1 கொரி 11:22,33,34 ... *இல்லாதவரை வெட்கப்படுத்துதல் ...*
*ஒருவருக்காய் ஒருவர் காத்திருங்கள்.*

இது ஒரு பின்மாற்றமே —

அப் 2:44-46 ... ஆரம்பத்தில் *கபடமிலா இதயம் ... போஜனம்*

ஓர் எச்சரிப்பு —

நீதி 17:5அ ... *ஏழையைப் பரியாசம் ... சிருஷ்டிகரை நிந்திப்பு*

(ஆ) இன வெறி/ஜாதி வெறி

யூதர் எப்போதும் பிறவினத்தவரை அலட்சியம்பண்ணினர்.
— குறிப்பாக, சமாரியர் பாதி யூதராக இருந்தாலும்,
அவர்களோடு தொடர்பே கிடையாது.

ஆனால் இயேசு வேண்டுமென்றே சமாரியரைப் பாராட்டினார் —

☐ நல்ல சமாரியன் (லூக் 10:30-37)

☐ 10 தொழுநோயாளிகளில் ஒருவன் (லூக் 17:15-17)

பழைய ஏற்பாட்டு எடுத்துக்காட்டுகள்: லூக் 4:25-27

☐ எலியா — சீதோனிலுள்ள ஒரு விதவையிடம் ...
(இஸ்ரவேலில் பல விதவைகள் இருந்தும்)

☐ எலிசா — சீரியா நாட்டு நாகமான் என்ற தொழுநோயாளி
(இஸ்ரவேலில் பல தொழுநோயாளிகள் இருந்தும்)

ஆனால், சீடரோ சமாரியா கிராமத்தின் மீது, எலியா செய்தது போல என்று சொல்லி, அக்கினியை இறக்க விரும்பினர் (லூக் 9:51-55)

எருசலேம் vs. சமாரியா (ஊர் வெறி) (வச 51)

பவுலின் சவால்:

*''அவர்களைவிட நாம் விசேஷித்தவர்களா?''*
ரோ 3:9 ... *''இல்லவே இல்லை''*

(இ) உறவினர் எனும் பாகுபாடு

இயேசுவின் மனப்பாங்கு —

மாற் 3:31-35 ... *யார் என் சகோதரர் ... தாய் ...?*

இது பவுலின் உபதேசத்திலும் தெளிவு —

2 கொரி 5:16,17 ... *இதுமுதல் மாம்சத்தின்படியல்ல ...*

*''கிறிஸ்துவையும்''* எங்கள் யூதத்துவத்தின்படி அல்ல!

*''பழையவை''* — இன வெறி, ஜாதிப் பிசாசு, ஊர் வெறி
*யாவும் ஒழிந்தன.*

■ ஒவ்வொரு சபையிலும் முழங்கப்படவேண்டிய செய்தியிது!
எங்கும் பாரபட்சம்

(i) ஆசீர்வாதங்களைப் பகிர்வதில்

அப் 6:1 ... *கிரேக்கர் ... எபிரெயர்*

அவர்கள் யூதராயினும் கிரேக்க மொழி பேசினர்
(இரு மொழிப் பிரிவுகள்).

(ii) தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில்

1 தீமோ 5:21,22 ...

*ராஜாக்களை ஏற்படுத்தினர், ... என்னால் அல்ல* ... (ஓசி 8:4அ)

இவ்விதத் தேர்ந்தெடுப்புகளைத் தேவன் ஏற்பதில்லை.

இவ்விதத் தலைவர்கள் மக்களை மட்டரகமாய் நடத்துவர் —

எபே 6:9 ... *தேவனிடம் பட்சபாதம் இல்லையென அறியாது ...*

■ நாம் சிலருக்கு முக்கியத்துவம் கொடுத்து,
சிலரை அலட்சியப்படுத்த ஒரு காரணம் —

□ நம்மைக் குறித்து மிஞ்சி எண்ணுகிறோம் —

ரோ 12:16 ... *மேட்டிமைச் சிந்தை ... தாழ்மை*

(உ-ம்) சபையில் சாதாரண மக்களைவிட, படித்தவர்களும் செல்வாக்குள்ளவர்களும் மேலானவர் எனக் கருதுகிறோம்.

□ பிறரைவிட அதிகமாக நம்மிடமுள்ள யாவும் தேவனிடமிருந்தே பெற்றதென்பதை மறந்துவிடுகிறோம் —

1 கொரி 4:7 ... *உன்னை விசேஷித்தவனாகச் செய்கிறவர் யார்?*
*அதிக ஞானம் ... அழகு ... பலம் ... செல்வம்*

□ பவுலைப் போன்ற மனநிலையை உருவாக்கத் தவறுகிறோம் —

ரோ 7:18 ... *"என்னில் நன்மை இல்லையென அறிந்து ..."*

□ சாராசரித் தரத்திற்கும் குறைவானவர்களாலேயே பரலோகம் நிரம்பியிருக்கும் என்பதை நாம் உணருவதில்லை —

1 கொரி 1:26-29 ... *உங்கள் அழைப்பைப் பாருங்கள் ...*
*ஞானிகள் அநேகரில்லை ... பலவான்கள் ... பிரபுக்கள் ...*

■ இச்செய்தி நமது சபைகளில் முழங்கப்பட்டால்,
ஆவியானவரின் இன்னொரு மாபெரும் அருள்மாரி வரும் —

அப் 10:28 ... *"எந்த மனிதனும் ... அசுத்தமல்ல ..."*
:34 ... *"தேவன் பட்சபாதமுள்ளவரல்ல"*
:44 ... *"இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக் கையில், பரிசுத்த ஆவியானவர் இறங்கினார் ..."*

■ G.W. Briggs (1875-1959) என்பவரின் பாடல்:

*கிறிஸ்துவில் இனங்களெல்லாம் கூடும்,*
*பழங்காலக் கசப்புகள் மறையும்,*
*உதயம் முதல் அஸ்தமனம் வரைக்கும்,*
*முழுவுலகும் முழுமை பெறும்:*
*கிறிஸ்துவே ஆண்டவரென ஏற்றுவோம்;*
*மனிதர் மறப்பார் பயமனைத்தும்;*
*வாள்கள் கலப்பைகளாகும்,*
*ஈட்டிகள் கருக்கரிவாள்களாகும்!*

(பார்க்க: பக்கங்கள் 634-637)

## 6. யாரையும் சீக்கிரம் கழித்துக்கட்டிவிடக்கூடாது.
Do not write off anyone quickly.

■ நம்மில் நல்லவர்க்குள்ளும் எவ்வளவோ தீயதும்,
தீயவர்க்குள்ளும் எவ்வளவோ நல்லதும் இருப்பதால்
எவரையும் சீக்கிரம் கழித்துக்கட்டிவிடக்கூடாது!

பிறரை நியாயந்தீர்ப்பதில் நாம் தேறியவர்கள்.
பிறரை நியாயந்தீர்ப்பதைக் குறித்து பைபிள் என்ன சொல்லுகிறது?

□ சரியாய்ச் சொன்னால், நாம் எவரையும் நியாயந்தீர்க்கவே கூடாது!

இயேசு: மத் 7:1 ... *நியாயந்தீர்க்காதிருங்கள் ...*
காரணம்: நமக்கும் *அதே நியாயத்தீர்ப்பு* வரும்! (வச 2)
பொதுவாக நமது குற்றத்தைக் காணாது,
பிறரது குற்றத்தையே பெரிதுபடுத்துகிறோம் —
*''துரும்பு ... உத்திரம்''* (வச 3)

பவுல்: ரோ 2:1 ...*பிறரை நியாயந்தீர்ப்பது ... ஆக்கினை ... உனக்கு*
காரணம்: நம்மிடத்திலும் அதே குற்றம்!
(உ-ம்) இயேசுவும் விபச்சாரத்தில் பிடிபட்டவளும் (யோ 8)

□ ஒரு நபரைக் குறித்துத் தீர்மானிக்கவேண்டுமென்றாலும்,
***தோற்றத்தின்படித்*** தீர்ப்பு செய்யக்கூடாது (யோ 7:24)

ஓர் அழியா சத்தியம்:
1 சாமு 16:7ஆ ... *கர்த்தர் ... இருதயம் ... மனிதன் ... முகம்*

சரியாய்ச் சொன்னால்,
எவரைக் குறித்தும் நமக்கு எல்லாம் தெரியாது —

எல்லாவற்றிற்கும் மறுபக்கமும் உண்டு —
நீதி 18:17 ... *முதல் பேசுகிறவன் ... அவன் அயலானோ வந்து...*

எனவேதான் —
*''கேட்கிறதற்குத் தீவிரம்... பேச... கோபிக்கத் தாமதம்''* (யாக் 1:19)
*''மனிதனது கோபம்* VS. *தேவனது நீதி''* (வச 20)

பொதுவாக, நியாயத்தீர்ப்பு நாள் வரை காத்திருப்பதே சரி —

1 கொரி 4:5 ... *இரண்டாம் வருகை ... தேவனிடமிருந்து ... அவனவனுக்குரியது*

■ உடனடி நியாயத்தீர்ப்புக்கு எதிராக ஓர் எடுத்துக்காட்டு —

யோனாவும் கப்பற்காரரும்:

யோனா 1:7 ... யோனாவின் பேரில் சீட்டு

:8 ... அக்கறையினால் எழுந்த கேள்விகள்

:11 ... *நாங்கள் என்ன செய்யலாம்?*

:12 ... *என்னைக் கடலில் எறிந்துவிடுங்கள்*

:13 ... *வேகமாய்த் தண்டு வலித்தனர்*

:14 ... *ஜெபித்தார்கள்*

:15 ... யோனாவைக் கடலில் போட்டுவிட்டார்கள்

:16 ... *ஆயினும் பயந்து, பலி செலுத்தினர்.*

■ புதிய ஏற்பாட்டிலிருந்து ஓர் எடுத்துக்காட்டு —

யோசேப்பும் மரியாளும்:

மத் 1:19 ... பிரமாணத்தின்படி அவன் அவளைக் கல்லெறிந்து கொல்ல ஒழுங்குசெய்திருக்கலாம்;
தேவன் அவனோடு பேசினபோதோ பொறுமையாய் இரக்கவுணர்வுடன் அதை ஏற்றுக்கொண்டான்!

■ அதுபோலவே, யோபுவின் சிநேகிதர் 7 முழு நாட்கள் நியாயத்தீர்ப்பு வார்த்தைகளைச் சொல்லாமல் அமைதியாய் இருந்தனர்—(யோபு 2:13)

எதையும் உடனே அனுமானித்துவிடுவதே நமது பிரச்னை!

■ நபர்களைத் துரிதமாக நாம் ஒதுக்கிவிடுவதற்கு மற்றொரு காரணம் — சமாளித்துப்போவது **முடியாதென** முடிவுகட்டிவிடுகிறோம். எதிர்மாறான, கடினமான நபர்களை ஆண்டவர் சேர்த்துவைப்பதற்கு வேதத்தில் பல எடுத்துக்காட்டுகள் உண்டு —

நோக்கம்: *''இரும்பை இரும்பு கூர்மையாக்கும்''* (நீதி 27:17)

☐ சாராயுடன் ஆகார்

ஆதி 16:8,9 ... *காத்திரு ... அடங்கியிரு*

☐ லாபானுடன் யாக்கோபு

யாக்கோபு = எத்தன்

லாபான் = ''வெள்ளை'' = வஞ்சகம்

வஞ்சிப்பதில் கில்லாடி

(பெண் கொடுத்ததிலும் ... ராகேல் vs. லேயாள்)

☐ மத்தேயு & சீமோன் (லூக் 6:15)

மத்தேயு: ரோமப் பேரரசின் வரிக்காரன்

சீமோன்: ரோம ஆட்சியைக் கவிழ்த்துப்போட முயன்ற தீவிரவாதக் கட்சியைச் சேர்ந்தவன்

☐ மரியாள் & மார்த்தாள் (லூக் 10:41,42)

தியானிப்பதில் பிரியம் vs. வீட்டு வேலைகளில் இன்பம்

☐ எயோதியாள் & சிந்திகேயாள் (பிலி 4:2)

எயோதியாள் = வாசனை (fragrance)

சிந்திகேயாள் = அதிர்ஷ்டம் (fortune)

அதாவது, கலை ரசனை vs. பொருளாதாரச் சிந்தை

அழைப்பு: *''கர்த்தருக்குள் ஒரே மனமாயிருங்கள்!''*

■ பரலோகில் ஆச்சரியங்கள் நிறைந்திருக்கும்!

லூக் 13:28-30 ... *முதல் ... கடைசி ... கடைசி ... முதல்*

■ சில நடைமுறை ஆலோசனைகள்:

(அ) ஒருவர் திரும்பத் திரும்பத் தவறினாலும்,
அவரை வெறுக்காதீர்;
ஏனெனில், *''அன்பு திரளான பாவங்களை மூடும்''*

பழைய ஏற்பாடு: நீதி 10:12 ... *''சகல'' பாவங்கள்*

புதிய ஏற்பாடு: 1 பேது 4:8 ... *''திரளான'' பாவங்கள்*

''இப்படியிருப்பதால்'' என்று நமது அன்பு இருக்கக்கூடாது;
''இப்படியிருந்தாலும்'' என்றிருக்கவேண்டும்!

(உ-ம்) *நாம் பாவிகளாயிருக்கையிலேயே கிறிஸ்து நமக்காய் மரித்தார்!* (ரோ 5:8)

தேவனே புறக்கணியாதவரை நான் புறக்கணிப்பதெப்படி?
(எண் 23:8ஆ)

(ஆ) மனிதர் எப்படி ''இருக்கிறார்கள்'' என்றல்ல,
எப்படி ''மாறக்கூடும்'' என்றே சிந்தியுங்கள்.

(உ-ம்) ஒரே தவறுதலினால் மாற்குவைப் பவுல் வேண்டாம் என்றான் (அப் 15:38)

பர்னபாவோ மாற்குவை எப்படிப்பட்டவனாக மாற்றலாம் என்று பார்த்தான் (வச 37)

விளைவு: முக்கிய குழுவில் திரும்பச் சேர்க்கப்பட்டான் (2 தீமோ 4:11) லூக்காவைத் தவிர யாவரும் பவுலை விட்ட நிலையில்!!!

''கர்த்தாவே, **என்னை** மாற்றும்'' என்றே ஜெபியுங்கள்!

■ ஓர் எடுத்துக்காட்டு —

தச்சுப்பட்டறையில் சண்டை ...

| | | |
|---|---|---|
| சுத்தியல் | : | ஒரே சத்தம் |
| உளி | : | யாரையும் வெட்டுதல் |
| அளவு கோல் | : | குறை கூறுதல் |
| திருப்புளி | : | தலையிடுதல் |
| இழைப்புளி | : | மேலெழுந்த நிலை |

இந்த எல்லா ஆயுதங்களையும் கொண்டு ஒரு சிலுவை செய்து, அதிலேயே அந்தத் தச்சன் உயிர்விட்டார்!

## 7. பொறாமைக்கு இடம் கொடுக்கக்கூடாது.
Do not give place to envy.

■ ஐக்கியத்தின் ஆரோக்கியத்தைப் பாழாக்கும் தீயவை ஏராளம்;
ஆனால், இவையெல்லாவற்றிலும் மேலோங்கி நிற்பது பொறாமையே—

☐ 1 கொரி 12,13,14இல் ஆன்மீக வரங்கள் விளக்கப்பட்டுள்ளன.
முக்கிய படிப்பினை: அன்பிலா வரங்கள் பயனற்றவை (அத் 13)

அத் 13: அன்பு எதைச் செய்யும்,
அன்பு எதைச் செய்யாது (வச 4-7)

அன்பு எதைச் செய்யாது என்பதில் முதல் வருவது —
*''அன்பு பொறாமை கொள்ளாது!''* (வச 4)

☐ எல்லாக் *''கலகத்திற்கும்'' ''துர்ச்செயலுக்கும்''* பொறாமையே வேர்.
பழைய மொழியாக்கத்தில் *''வைராக்கியமும் விரோதமும்''* என்பது
*''பொறாமையும் சுயநாட்டமும்''* என்றிருக்கவேண்டும்.
(யாக் 3:16) *''பொறாமையும் சுயநாட்டமும்''* தொடர்புடையவை.

பொறாமை: ''பிறர்க்கு அது இருக்கக்கூடாது!''
சுய நாட்டம்: ''எனக்கு மட்டுமே அது இருக்கவேண்டும்!''

☐ எல்லாப் பாவங்களும் சமமாக தீயவையே;
''பொறாமையோ'' அநேகப் பாவங்களைவிடக் கொடுமையானது—
நீதி 27:4 ... *உக்கிரம் ... கோபம் ... பொறாமை*

☐ பில்லி கிரகாம் சொல்லுகிறார்:
''பொறாமை'' நற்பெயரைக் கெடுக்கும், சபைகளைப் பிரிக்கும்,
கொலைகளுக்குக் காரணமாகும். பொறாமை நமது நண்பர்
வட்டத்தைச் சுருக்கிவிடும், நமது தொழிலை அழித்துவிடும்,
நமது ஆத்துமாக்களைக் குன்றச் செய்யும்.
அதின் சாபத்திற்குள்ளானோர் பல நூறுகளைப் பார்த்திருக்கிறேன்!''

☐ பொறாமையானது பொறாமைப்படுகிறவனையே அழித்துவிடும்.
அது நமது உடல் சுகத்தையும் பாதிக்கும் —
நீதி 14:30 ... *பொறாமை ... எலும்புருக்கி*
உடல் சுகவீனத்திற்கு மனநிலை ஒரு காரணி.

■ பொறாமைக்கு வேத எடுத்துக்காட்டுகளும், படிப்பினைகளும்:

☐ காயீனும் ஆபேலும் ஆதி 4:3-5

முதல் கொலைக்கான காரணம்.

பரிகாரம்: *நன்மை செய்.* அதாவது, வாழ்வைச் சீராக்கு (வச 6,7).

வியாக்கியானம்: 1 யோ 3:11,12 ... *பொல்லாப்பு ... நீதி ...*

☐ யோசேப்பும் அவன் சகோதரரும் ஆதி 37:4,5,11/அப் 7:9

படிப்பினை: தேவன் ஒருவரைப் பிறரைவிட அதிகமாக ஆசீர்வதித்தால், அது எப்படியாவது அவரைப் பிறர்க்கு ஆசீர்வாதமாக்குவதற்கே.

யோசேப்பின்மீது பொறாமை; ஆனால் முடிவில் அவர்கள்மீது பரிதாபம்!

(அப்படியே, கெட்ட குமாரன்மீது மூத்தவன் பொறாமை)

☐ மோசேக்கு விரோதமாக மிரியாமும் ஆரோனும்

எண் 12:1,2

இறைப்பணியாளர் நடுவில் பொறாமைக்கு ஓர் எடுத்துக்காட்டு —

அது ஊழியத்தையடுத்த பொறாமைதான்;

அவர்களோ அவனது சொந்த வாழ்வைத் தாக்கித் தங்கள் பொறாமையை மறைத்தனர்.

பொறாமை பெரும்பாலும் பொய்க் குற்றச்சாட்டைப் பிறப்பிக்கும் —

1 பேது 2:1,2 ... *பொறாமை ... புறங்கூறுதல்*

அவதூறும், குற்றஞ்சாட்டுதலும் பேய்த்தனமானவை —

வெளி 12:10,11 ... *இரத்தத்தினால் ஜெயித்தார்கள்*

ரோ 8:33,34 ... *தீர்ப்பவன் யார்? ... கிறிஸ்துவே ... மரித்தார் ...*

மிரியாமிடமும், ஆரோனிடமும் தேவன் இவ்விதமே வாதாடினார்.

☐ சவுலும் தாவீதும்

1 சாமு 18:7-9 ...கோலியாத்தை வீழ்த்துதல்

*சவுல்...ஆயிரங்கள்...தாவீது... பதினாயிரங்கள்*

கோபமும் பொறாமையும்

தவறாய்ப் புரிந்துகொண்டதாலேயே பொறாமை —
வச 6,7 ... **சவுலைத்தான்** வாழ்த்த பெண்கள் வந்தனர்!
பொறாமை கண்களைக் குருடாக்குகிறது.

தாவீதுக்கு இவ்விதத் திறமையைக் கொடுத்ததற்காய்ச் சவுல் தேவனைத் துதித்திருக்கவேண்டும் —

(உ-ம்) மத் 9:8 ... *''மனிதருக்கு'' இவ்வித அதிகாரத்தைக் கொடுத்த தேவனை மக்கள் மகிமைப்படுத்தினர்.*
இயேசு அவர்கள் ஊரைச் சேர்ந்தவர் (வச 1)

(உ-ம்) இதுவே இயேசுவைக் குறித்து யோவானின் சிந்தை —
யோ 3:26,27 ''*பரத்திலிருந்து கொடுக்கப்பட்டாலொழிய*''

ஒருவரையொருவர் பாராட்ட சந்தர்ப்பம் தேடுங்கள்;
அப்பொழுது பொறாமைக்கு இடமே இருக்காது (வச 30,31)

உங்களைவிட அதிகக் கூட்டம் சேர்க்கும் ஊழியன்மீது பொறாமை வேண்டாம் —

(உ-ம்) அப் 13:44,45 ... பவுல் & பர்னபா vs. யூதர்

■ பொறாமைப்பட வரும் சோதனையை மேற்கொள்வது எப்படி?

(அ) யார் வென்றாலும், இறுதியாக வெற்றி இறையரசுக்குத்தான்.

பலவித ஒப்பனைகள் —

☐ உடல்: 1 கொரி 12:26ஆ ... ''*ஓர் உறுப்பு மகிமைப்பட்டால், எல்லா உறுப்புகளும் கூடவே மகிழும்!*''

☐ வயல் வேலை: பவுலோ, அப்பொல்லோவோ,
தானியங்கள் சேர்வது ஒரே களஞ்சியத்தில்தானே?

☐ யுத்தம்: கோலியாத்தை வீழ்த்துவது சவுலோ, தாவீதோ,
வெற்றி இறைமக்கள் இஸ்ரவேலருக்குத்தான் (1 சாமு 17:46,47)

ஒரு பழமொழி:

''யார் குத்தினால் என்ன, நெல் அரிசியானால் போதாதா?''
(It matters not who pounds the paddy, provided it becomes rice!)

(ஆ) தேவன் உங்களிடத்தில் ஒப்புவித்ததை
உண்மையோடும் கருத்தோடும் செய்துகொண்டிருங்கள் —

(உ-ம்) இரு தாலந்து பெற்றவன் ஐந்து தாலந்து பெற்றவன்மீது பொறாமைப்படக்கூடாது; அப்பொழுது அவனுக்குத் தக்க பிரதிபலன் கிடைக்கும்.

கலா 6:4 ... *தன் தன் செயல்களைப் பார்க்கட்டும் ... பிறரோடு ஒப்பிடாமல் ... களிகூர்ந்து ...*

- உங்கள்மீது பிறர் பொறாமைப்பட்டால் —

தேவனுக்குள் உங்களுக்கிருக்கும் பாதுகாப்பை
நினைத்துக்கொள்ளுங்கள் —

(உ-ம்) யோசேப்பு (அப் 7:9)... *ஆனால் தேவன் அவனோடு இருந்தார்!* இறைவார்த்தை அவனுக்குள் ஆழமாய்ச் செயல்பட்டது (சங் 105:19).

சங் 56:4இன்படி அவன் செயல்பட்டான் —
*தேவனை நம்பியிருக்கிறேன்...மனிதன் எனக்கு என்ன செய்வான்?*

அதேபோல, சங் 27:1 ... *கர்த்தர் என் வெளிச்சம் ... இரட்சிப்பு ... பலம் ... யாருக்கு அஞ்சுவேன்?*

## 8. பிறரிடம் அதிகம் எதிர்பார்க்கக்கூடாது.
Do not expect too much from others.

■ என்றோ சொல்லப்பட்டது —

எதையுமே எதிர்பார்க்காதோர் பாக்கியவான்கள்;
அவர்கள் ஏமாற்றமடையார்!

இவ்வுலகு நன்றியறிதல் இல்லாததுதான் என்பதை மறக்கக்கூடாது —

☐ மனுக்குலத்தின் முதல் பாவம் —
ரோ 1:20,21 ... *உலகமுண்டானது முதல் ... ஸ்தோத்திரியாமலும் ...*
(வச 21-32 ... வேதத்திலுள்ள மிக இருட்டான பாவப் பட்டியல்)

☐ இதுவே சாலொமோன் கண்டறிந்தது —
பிர 9:13-15 ... *"ஏழை மனிதன் ... நினைக்கப்படவில்லை ..."*
*"சூரியனுக்குக் கீழே எங்கும்"*

■ ஏமாற்றப்படுவதினால் எவரையும்விட
அதிகம் நொந்துபோகவேண்டியவர் தேவன்தான்!

மனிதனது நன்றியின்மையால், தேவன் *"துக்கமடைந்தாலும்"*
அவர் *"இளக்கரிப்பதேயில்லை"* —
இனி முடியாதென்று விட்டுவிடுவதுமில்லை!

ஒருசிலர்தான் நம்மை ஏமாற்றியிருக்கின்றனர்;
தேவனையோ "எல்லாரும்" ஏமாற்றிவிட்டனர்!

தேவனது ஏமாற்றம் ஆதாமில் துவங்கியது;
இன்னும் அது தொடர்கிறது —

(உ-ம்) ஏசா 5:1-4,7 ... *"நற்குலத் திராட்சை ... கசப்பான பழங்கள் ... இன்னும் என்ன?"*

அவர் அவர்களைத் தண்டித்தாலும்,
அவர்களைக் கைவிடவில்லை ...
14:1 ... *"இன்னும்"* இஸ்ரவேலை நேசிக்கிறார்!

பரம தந்தையின் இச்சுபாவத்தை இயேசு சுட்டிக்காட்டி,
அவரைப்போல நாமும் இருக்கவேண்டுமென்று அழைக்கிறார் —

லூக் 6:32-36 ... *சிநேகியுங்கள் ... நன்மை செய்யுங்கள் ... கடன் கொடுங்கள் ...*

*''நன்றியற்றோரிடமும்''* ... தேவன் அன்பாயிருக்கிறார் —
சூரிய உதயமும் மழை பெய்தலும் தேவனது இக்குணாதிசயத்தை நெடுகவே நினைவுபடுத்துபவை — மத் 5:44,45

அதுவே *''பூரண சற்குணத்தின்''* அடையாளம் (வச 48)

■ இயேசு தமது வாழ்வில் இதே சவாலைச் சந்தித்தார் —

☐ பொது மக்களிடமிருந்து  லூக் 17:12-17

— *''மற்ற ஒன்பது பேர் எங்கே?''*

அதாவது, 90% நன்றியற்றவர்கள்.
இயேசுவுக்கே 10%தான் நன்றியாயிருந்தனர்!

— *''இந்த அந்நியன் தவிர வேறொருவனும் இல்லையா?''*
அதிகமாய் எதிர்பார்க்கிறவர்களிடமிருந்து ஏமாற்றம்.

யாரை நாம் குறைவாக மதிப்பிடுகிறோமோ (சமாரியன்)
அவர்கள்தான் நன்றியுடன் இருப்பார்கள்!

☐ அவரது சீடரிடமிருந்து
பேதுரு மறுதலிப்பான் என்பதை அறிந்திருந்தார் (லூக் 22:31,32)
யாவரும் ஓடிப்போவார்கள் என்பது அவருக்குத் தெரியும் (மத் 26:31)
**ஆனாலும்,** அவர்களுக்குச் சிங்காசனங்கள் வாக்கு! (லூக் 22:28-30)

அவரது அன்பு ''இப்படி இருப்பதால்'' எனும் அன்பல்ல;
மாறாக, ''இப்படி இருந்தாலும்'' எனும் அன்பு!

எனவேதான், சீடர் அவரை நெடுகவே ஏமாற்றிக்கொண்டிருந்தும்,
அவரோ *''கடைசி வரை''* அவர்களை நேசிக்க முடிந்தது (யோ 13:1).
(வச 2, *பிசாசு யூதாசுக்குள் புகுந்தான்)*

''ஏமாற்றங்களைத் தகனித்துவிடவேண்டும், பதனிடக்கூடாது!''

☐ அவரது நடைமுறைப் போதனை:

*"நீ ஒரு விருந்தை ஆயத்தம்பண்ணும்போது ..."*

லூக் 14:12-14 ... ***அழையாதே***... *ஆனால்...*

*அவர்கள் திரும்பக் கொடுக்க முடியாது*

இதை விருந்துக்கு அழைத்தவனிடம் சொன்னார்!!!

■ அப்போஸ்தலர் இதே சவாலைச் சந்தித்தனர் —

☐ கொரிந்திய விசுவாசிகள்

2 கொரி 12:15 ... *எவ்வளவு அதிகமாய் அன்பு ...*

*அவ்வளவு குறைவாய் அன்பு ...*

*செலவு பண்ணவும் ... செலவு பண்ணப்படவும் ...*

பவுலால் எப்படி இவ்விதம் செய்ய முடிந்தது?

(வச 14ஆ ... *பெற்றோர்போல*)

☐ கலாத்திய விசுவாசிகள்

கலா 4:13-16 ... *அன்று எவ்வளவு அன்பு ... இன்றோ சத்துரு!*

நன்றியில்லாது போகட்டும்;

உங்களுக்கு விரோதமாய்த் திரும்பினாலும்,

நன்மையே செய்துகொண்டிருங்கள் ...

ரோ 12:20,21 ... *சத்துரு ... ஆகாரம் ... தீமை ... நன்மை ...*

■ சில நடைமுறை ஆலோசனைகள்:

☐ கீழ்வரும் தத்துவத்தினால் ஆட்கொள்ளப்பட்டிருங்கள் —

*"சேவை பெற அல்ல, சேவை செய்ய"* (மாற் 10:45)

பிறர் எனக்கு என்ன செய்கிறார்கள் என்பதல்ல;

பிறர்க்கு நான் என்ன செய்ய முடியும் என்பதே!

நமது அழைப்பே இதுதான்: பிறர்க்கு **ஆசீர்வாதம்** (1 பேது 3:9)

☐ உடனடி விளைவுகளையல்ல, முடிவான பலன்களையே நோக்கியிருங்கள் —

கலா 6:9,10 ... *ஏற்ற காலத்தில் அறுப்போம் ... வாய்ப்பு*

பிறரை ஆசீர்வதிக்க வாய்ப்புகளைத் தேடுங்கள்!

☐ தேவன் **ஒருவரே** நம்மை ஏமாற்றுவதில்லை —

எபி 6:10 ... *மறந்துவிடுவதற்கு அநீதியுள்ளவரல்ல ...*

எனவே, *கர்த்தரை நம்பி நன்மை செய்யுங்கள்!* (சங் 37:3)

## 9. நட்பு மனப்பான்மையை இழந்துவிடக்கூடாது.
Do not lose the spirit of friendship.

■ நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி —
''நட்பு'' யாரிடமும் இருக்கலாம்;
ஆனால் ''ஐக்கியம்'' தேவப் பிள்ளைகளோடு மட்டும்தான்.

இப்படிச் சொல்வதால்,
இறைமக்களின் ஐக்கியத்திற்குள் நுழைந்ததும்
''நட்பு'' மனப்பான்மையை விட்டுவிடவேண்டும் என்று பொருளல்ல.

இறைமக்களின் சகவாசத்திற்குள் வந்தவுடன் ஒருவரோடொருவர்
ஆசாபாசமாய், குதூகலமாய், இருப்பதை விட்டுவிடுவது துர்ப்பாக்கியம்.

நமது ஐக்கியங்களிலும் ''நட்பு'' மேலோங்கியிருக்கவேண்டும்
என்று பைபிள் எவ்வளவோ போதிக்கிறது.

ஒருவரையொருவர் ''சகோதர சகோதரிகள்'' என்று அழைக்கிறோம் —
அப்படியானால், நாம் ஒரே ''குடும்பம்'' என்றுதானே பொருள்?
ஆனால் **''சிநேகம்''** என்பதைக்கூட விட்டுவிடுவதேனோ?

☐ அன்புடன் ***சகோதர சிநேகத்தைக்*** *''கூட்டவேண்டும்.''*
2 பேது 1:7
அதாவது, ''ஐக்கியத்தோடு'' ''நட்பைக்'' கூட்டுங்கள்.

☐ ஆதித் திருச்சபை இந்த இரண்டையும் வைத்துக்கொண்டது —
அப் 2:46,47 ... *மகிழ்ச்சி ... மக்களிடம் ஆதரவு*

☐ இயேசுவானவர் *பாவிகளுக்குச் ''சிநேகிதராக''* இருந்தார்;
நாமோ *''பரிசுத்தவான்களுக்குக்கூட''* சிநேகிதராக இல்லை
(மத் 11:19; லூக் 7:34)

சீடரோடுள்ள அவரது உறவைப் பாருங்கள் —
யோ 15:15 ... *ஊழியக்காரர் அல்ல, சிநேகிதர் ...*
லூக் 12:4 ... *தமது சீடரிடம் ... எனது சிநேகிதர் ...*

திறந்த மனம் ... மாய்மாலமின்மை ... நெருக்கம் ... ஊக்குவிப்பு
இயேசுதாமே நம்மைச் ''சிநேகிதர்'' என்று அழைக்கும்போது,
நாம் நமக்குள்ளே எப்படி வேறுவிதமாய் இருக்கமுடியும்?
அவர் ''யூதாசைக்''கூட *''சிநேகிதனே''* என்றழைத்தார்! (மத் 26:50)

■ இச்சத்தியம் பைபிள் முழுவதும் காணப்படுகிறது —

☐ யோபுவும், அவன் சிநேகிதரும்
இப்புத்தகம் முழுவதிலும், நாம் ஜெபக்கூட்டங்களையோ,
ஆராதனைகளையோ அல்ல,
நட்பின் ஆழ்ந்த வெளிப்பாடுகளையே காண்கிறோம்.

☐ சங்கீதக்காரன்
119:63 ... *உமது கட்டளைகளைக் கைகொள்ளுகிறவர்களுக்கு*
*நான்* ***தோழன்.***

☐ தானியேலும் அவன் சிநேகிதரும்
தானி 2:17,18 ... *தோழர்கள்*

☐ அப்போஸ்தலன் யோவானும் விசுவாசிகளும்
3 யோ 13,14 ... *முகமுகமாய் ... சிநேகிதர் வாழ்த்துதல்*

■ பவுலின் நிருபங்களில் **பாசமான** வாழ்த்துதல்கள் ஏராளம் —
(உ-ம்) ரோ 16 ... *''வாழ்த்துதல்''* என்ற வார்த்தை ... 17 முறை
இறுதியாக, வச 6, *''பரிசுத்த முத்தம்''*

கனிவாய்க் கைகுலுக்கல்
மலர்ந்த புன்னகை
நட்புநிறை பார்வை
பாசமான அரவணைப்பு
பரிசுத்த முத்தம்
அன்பான விசாரிப்பு
மனமார்ந்த வாழ்த்துதல்கள்

■ மற்றொரு உதாரணம் —

போவாசும் அவனது அறுவடையாளர்களும் (ரூத் 2:4)
*''கர்த்தர் உங்களோடிருப்பாராக ... கர்த்தர் உம்மை ஆசீர்வதிப்பாராக''*
ஒருவருக்கொருவர் என்னே உற்சாகமூட்டல்!

■ சிநேகம் என்பது பூவுலகப் பண்பு மட்டுமல்ல; அது தெய்வீகமானது!

(உ-ம்) தேவனுடைய சிநேகிதன் : ஆபிரகாம் (யாக் 2:23)
தேவனுடைய சிநேகிதன் : மோசே (யாத் 33:11)
இயேசுவின் சிநேகிதன் : யோவான் ஸ்நானன் (யோ 3:29)
இயேசுவின் சிநேகிதன் : லாசரு (யோ 11:11)

■ இறைமக்களின் நட்பை வெளிப்படுத்த திருப்பந்தி ஒரு தருணம் —

□ அது எப்படி ஆரம்பமானது என்று பாருங்கள் —
அப் 2:46,47 ... *இல்லந்தோறும் ... அப்பம் ... மகிழ்ச்சி ...*
*... கபடமில்லா (குதர்க்கமில்லா) இதயம்*
எனவேதான் அது *''அன்பின் விருந்து!''* (யூதா 12)

''அன்பின் விருந்து'' என்று கூடிச் சாப்பிடும் வேளைகளில்தான் கர்த்தருடைய பந்தி ஆசரிக்கப்பட்டது —
1 கொரி 11:21இலிருந்து இதை அறியலாம்.
நாமோ அதைச் சடங்காச்சாரமாக்கிவிட்டோம்!

*''தகுதியாய்ப் பங்குபெறுதல்''* என்றால் என்ன?
1 கொரி 11:23-32 ... அப்பம் பிட்கும் ஆராதனைகளில் அடிக்கடி வாசிக்கப்படும் வேதப் பகுதி

முன்னுரை? வச 20-22 ... மற்றவர்கள் வருமுன் சாப்பிடுவது
முடிவுரை? வச 33,34 ... *மற்றவர்களுக்காய்க் காத்திருங்கள்.*

வேறு வார்த்தைகளில் சொன்னால்,
இங்கு வலியுறுத்தப்படுவது ''ஐக்கியமும் நட்பும்தான்''

— எனவேதான் அது ''ஐக்கிய விருந்தாராதனை'' (Communion)!

அது அப்பமும் இரசமும் ''பெற்றுக்கொள்வது'' அல்ல
— இது ரோமன் கத்தோலிக்கம்
அது அப்பத்திலும் இரசத்திலும் ''பங்குபெறுவது''
— இது பைபிள் மார்க்கம்

இது வலியுறுத்தப்பட்டுள்ளதைக் கவனியுங்கள் —

1 கொரி 10:16,17 ... *ஐக்கியம் ... ஒரே அப்பம் ... ஒரே சரீரம்*

எனவேதான் *''பாதம் கழுவுதல்''* அதோடு இணைக்கப்பட்டுள்ளது — யோ 13:4,5

பாதம் கழுவுதல் வேதாகமக் காலங்களில் விருந்தோம்பலின் வெளிப்பாடு —

- ☐ மூன்று அந்நியர்க்கு ஆபிரகாமின் விருந்தோம்பல் (ஆதி 18:2-4)
- ☐ சீமோனின் வீட்டிற்கு வந்த பெண்மணி (லூக் 7:44)
- ☐ நற்சாட்சி பெற்ற விதவை யார்? (1 தீமோ 5:10)

■ நட்புறவைக் குறித்து அதிகமாய்ப் போதிக்கிற நீதிமொழிகள் புத்தகத்தைப் படியுங்கள் —

- ☐ நீதி 17:9 ... மன்னித்தல் எளிதாகிறது.
- ☐ 17:17 ... குறிப்பாக நெருக்கடி நேரத்தில்
  (எபி 10:33 / வெளி 1:9 — *பாடுகளுக்குப் பங்காளி)*
- ☐ 18:24ஆ ... இரத்தத்தைவிட அடர்த்தியானது
  *''சகோதரனிலும் அதிகமாய்ச் சிநேகிப்பது!''*
- ☐ 19:6ஆ ... தயாளத்தில் நம்மைப் பழக்குவிக்கிறது (11:25)
- ☐ 27:5,6 ... பரஸ்பர திருத்தம் எளிதாகிறது
  *(இன்பமாக/உற்சாகமாக — வச 9)*
- ☐ 27:17 ... நமது ஆள்தத்துவத்திற்கே மெருகேற்றுகிறது
  *(இரும்பை இரும்பு கூர்மையாக்குவது போல)*
  நற்செயல்கள் செய்ய ஒருவரையொருவர்
  உற்சாகப்படுத்துவதின் மூலம் (எபி 10:24,25)

## 10. ஐக்கியத்தின் வட்டத்தைச் சுருக்கிக்கொள்ளக்கூடாது.
Do not limit your circle of fellowship.

■ ஐக்கியத்தைப் பற்றி நாம் பேசும்போது,
பொதுவாக நமது **உள்ளூர்ச்** சபையையே நினைக்கிறோம்.

ஒரு **குறுகிய** அளவில் இது சரிதான்.

*''கிறிஸ்துவின் சரீரம்''* என்று நாம் சொல்லும்போது,
அது **உலகளாவிய** திருச்சபையைக் குறிக்கிறது.

உள்ளூர்ச் சபையானது கிறிஸ்துவின் சரீரத்தின்
ஒரு **சிறிய பகுதியை** மட்டும் வெளிப்படுத்துகிறது.

நாம் மறுபடியும் பிறக்கும் நொடியிலேயே
கிறிஸ்துவின் உடலின் அவயவங்களாகிறோம் —
உள்ளூர்ச் சபை எதிலும் சேரும் முன்னரே!

☐ 1 கொரி 12:13 ... *ஒரே சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு*
(வைக்கப்பட்டு / உட்படுத்தப்பட்டு)

☐ *''பெரிய''* குடும்பத்தின் ஒரு பகுதி —
எபி 12:22-24 ... *சர்வ சங்க சபை* ... *பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற* ...
— நீங்கள் அங்கு *''வருவீர்கள்''* என்று இல்லை;
அதில் *''வந்து சேர்ந்தீர்கள்''* என்றிருக்கிறது!

திருச்சபை: உள்ளே பாவி இல்லை, வெளியே பரிசுத்தவான் இல்லை!

■ உள்ளூர்ச் சபைக்கும் அப்பால் நாம் செல்லவேண்டும்
என்பதற்குப் பல காரணங்கள் உண்டு —

(அ) புதிய ஏற்பாட்டுக் காலத்தில், ஊருக்கு ஒரு *''சபை''*தான்
*''எருசலேமிலுள்ள'' சபை* (அப் 8:1)
*''கொரிந்து'' சபை* (1 கொரி 1:2)
*''அந்தியோகியா'' சபை* (அப் 13:1)

ஒரு பிராந்தியமாக இருந்தாலோ, அங்கே பல *''சபைகள்''* இருந்தன
*''கலாத்தியா'' நாட்டிலுள்ள சபைகள்* (கலா 1:2)

இன்றோ ஒரே தெருவிலேயே எத்தனையோ சபைகள்!
இப்படியிருக்க, நாம் மற்ற சபைகளின் அங்கத்தினர்க்கும்
ஐக்கியத்தின் கரங்களை நீட்டவேண்டும் —

(உ-ம்) *''ரோம் நகரிலுள்ள அனைவர்க்கும் ... தேவப் பிரியர்''* (ரோ 1:2)
*''கொரிந்துவிலுள்ள தேவ சபை ...*
*அகாயாவிலுள்ள எல்லாப் பரிசுத்தவான்களுக்கும்''*
(2 கொரி 1:1) (அகாயா என்பது ஒரு நாடு/பிராந்தியம்)

(ஆ) அனைத்து ஆன்மீக வரங்களும் பெற்றுள்ள உள்ளூர்ச் சபை
எதுவும் கிடையாது — குறிப்பாக, ஊழிய வரங்கள்: எபே 4:13
எந்த உள்ளூர்ச் சபையில்
அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர்,
போதகர் எல்லாம் இருக்கிறார்கள்?
அரிதிலும் அரிது!
எனவேதான் சகலகலா வல்லவன் யாரும் கிடையாது!

எனவேதான், எந்த உள்ளூர்ச் சபையும் எல்லாவற்றிலும்
பலமுள்ளதல்ல —

சில ''தொழுகையில்'' பலமாய் உள்ளன (Worship)
சில ''வசனத்தில்'' பலமாய் உள்ளன (Word)
சில ''சாட்சி பகருவதில்'' பலமாய் உள்ளன (Witness)
சில ''தானதர்மச் செயல்களில்'' பலமாய் உள்ளன (Works)

நீங்கள் சமநிலைக் கிறிஸ்தவராயிருக்க விரும்பினால்,
சபைகளுக்கிடையே ஐக்கியங்கொள்ளவேண்டும் —
அப்பொழுதுதான், பல பரிமாண வளர்ச்சி அடைவீர்கள்.
பல சபைகளின் கூட்டு பலத்தால் மட்டுமே
நாம் சமுதாயத்தில் தாக்கம் ஏற்படுத்த முடியும் —

(உ-ம்) ரோ 15:18,19 ... *''வார்த்தை ... செய்கை ... அடையாளங்கள்''*
*''வார்த்தை''* — பெந்தெகொஸ்தேயினரல்லாத விசுவாசிகளின்
சபைகள்
(வேத ஆராய்ச்சி நூல்கள் பெருமளவில் இவர்களிடமிருந்துதான்)

*''செய்கை''* — புராதனச் சபைகள்

பள்ளிகள், மருத்துவமனைகள், நிவாரணப்பணிகள்

*''அடையாளங்கள், அற்புதங்கள்''* — பெந்தெகொஸ்தேயினர்

ஒருவருக்கொருவர் தேவை!

அப்பொழுதுதான், கீழ்க்கண்டது நடக்கும் —

''முழுச் சபையும்

முழுச் சுவிசேஷத்தையும்

முழு உலகிற்கும் எடுத்துச் செல்லும்!''

■ ஐக்கியத்தைக் குறித்துப் பேசும்போது, பல்வேறு திருச்சபைகளோடு மட்டுமல்ல, பல்வேறு திருச்சங்கங்களோடும் தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு நற்செய்திப்பணி நிறுவனத்திலும், நிவாரணப்பணி அமைப்பிலும் பலமும் உண்டு, **அத்துடன்** பலக்குறைவும் உண்டு. சங்கீதக்காரனின் பரந்த இதயம் நமக்கு வேண்டும் —

*உமக்குப் பயப்படும் அனைவருக்கும் நான் தோழன்!*

சங் 119:63 ... அவர்களது ஆன்மீகத் தரம் காரியமல்ல.

□ அவர்களது சிறு சிறு வேறுபாடுகளைப் பொருட்படுத்தாதீர்கள். ஒரு 16ஆம் நூற்றாண்டின் வேதப் பண்டிதரின் அறிவுரை:

— அத்தியாவசியமானவைகளில், ஒற்றுமை! (unity)

(உ-ம்) கிறிஸ்துவின் தெய்வீகம், விசுவாசத்தினால் நீதிமானாகுதல், வேதத்தின் முதன்மைத்துவம், முதலியன.

— அத்தியாவசியமற்றவைகளில், சுதந்திரம்! (liberty) ரோ 14:5,6

(உ-ம்) உணவுப் பழக்கங்கள், நாட்கள் அனுசரிப்பு, முதலியன

— எல்லாவற்றிலும், அன்பு! (charity)

அதாவது,

ஐக்கியத்தின் அடிப்படை: *''ஆவியில் ஒருமனம்''* மட்டுமே (எபே 4:3)

அது ஏற்கனவே உள்ளது! அதைக் காத்துக்கொள்ளுங்கள்!

*''விசுவாசத்தில் ஒருமனத்தின்''* (வச 13) அடிப்படையில் அல்ல.

இன்னும் இது இல்லை! — அதை அடையவேண்டும்!

*''அதுவரை''* — இன்னும் எதிர்காலத்தில்தான்.

*''ஆவியில் ஒருமனத்திலிருந்து''* ➡ *''விசுவாசத்தில் ஒருமனத்திற்கு''*

அதுவரை, *''வேற்றுமைகள்''* இருக்கத்தான் செய்யும் (1 கொரி 11:19)

வேற்றுமைகள், ''பிரிவினைகளுக்கு'' நடத்தக்கூடாது (வச 18)

இதை நினைவில் கொள்ளுங்கள் —

ஒன்றுபோலிருத்தல் (uniformity) ஒருமனம் **அல்ல!**

ஒரேவிதம் (sameness) ஒற்றுமை **அல்ல!**

வேற்றுமையில் (diversity) ஒற்றுமை!

- சில நடைமுறை ஆலோசனைகள் —

☐ இரு வாரங்களுக்கொரு முறை அல்லது மாதமொரு முறை ஒரே ஊரில் பல்வேறு சபைகளின் பொது ஜெபக்கூடுகைகள்.

ஜெபிக்கவேண்டிய காரியங்கள் —

எல்லாச் சபைகளிலும் எழுப்புதல் ...

நாடு சுவிசேஷமயமாக்கப்படுதல் ...

மிஷனரி இயக்கங்கள் ...

நற்செய்திப்பணித் திட்டங்கள் ...

வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள், முதலியன.

தேவையற்ற விவாதங்களைத் தவிர்த்திடுங்கள்;

அதிக நேரம் ஜெபத்திலேயே செலவிடுங்கள்.

☐ வேத ஆராய்ச்சிக் கூடுகைகள்

கூடி சேர்ந்து தியானிக்க ஆராய்ச்சிக் குறிப்புகள் ...

பாடத் திட்டங்கள் ...

பிரச்னையான உபதேசங்களைத் தவிர்த்திடுங்கள்.

☐ நற்செய்தியறிவிப்புத் திட்டங்கள்

*''சுவிசேஷத்தில் ஐக்கியம்!''* (பிலி 1:3)

*''ஐக்கியத்தின் வலது கை''* (கலா 2:9)

ஒரு சம்பவம்: சண்டையிட்டுக்கொண்டிருந்த இரு கப்பலோட்டிகள்
கடலில் மூழ்கும் ஒருவனைக் கண்டதும்
அவனைக் காப்பாற்றக் கைகோர்த்தனர்!

அனைத்துச் சபை நற்செய்திக் கூட்டங்கள் மற்றும்
பிற சபைகளின் சிறப்புக் கூட்டங்களில் பங்குபெறுங்கள்.

- ☐ சபை மேய்ப்பர்கள் ஐக்கியம்

சங் 133 ... தலைவர்களிடமிருந்துதான் ஒற்றுமை துவங்குகிறது!
*"ஆரோனின் சிரசின்மேல் ... தைலம்"*
சில மேய்ப்பர்களிடையே புன்சிரிப்புகூட கிடையாது.

பாடுவோம்: *Bind us together, Lord, ...*

*கட்டும், கர்த்தாவே, நீர் கட்டும், கர்த்தாவே,*
*அறுந்துபோகாத கயிற்றால்;*
*கட்டும், கர்த்தாவே, நீர் கட்டும், கர்த்தாவே நீர்,*
*கட்டும் எங்களை அன்பால்!*

- ■ **முடிவுரை**

இந்தத் தரிசனத்தோடு செயல்படுங்கள் —

வெளி 7:9,10 ... *சகல இனத்தார் ... கோத்திரங்கள் ...*
*மக்கள் ... மொழியினர்!*